
# சைவநெறி



தரம் 2

கவிஞர் த. துரைசிங்கம்

உ

# பாலர்

# சைவநெறி

# 2

★ பாடப் பொழிப்பு ★ செயல்நூல்

★ **உலகெங்கும் வாழும் சைவச் சிறுவர்களின் சமய அறிவை வளர்க்கும் நோக்குடன் உருவாக்கப்பெற்றது.**

★ **சைவநெறி தரம் 2 பாடநூலில் உள்ள அனைத்துப் பாடங்களையும் உள்ளடக்கியதாக ஆக்கப்பெற்ற செயல்நூல்.**

★ **சிறுவர்களின் ஆக்கத்திறனை வளர்க்கும் பயிற்சிகள் கொண்டது.**

**ஆக்கம்:**
**இலக்கிய வித்தகர்,**
**கவிஞர் த. துரைசிங்கம் B.A (HONS), Dip-in-Ed., S.L.E.A.S.**
**கல்விப்பணிப்பாளர் (ஓய்வு)**

**வெளியீடு:**
**ஸ்ரீலங்கா புத்தகசாலை,**
**234, காங்கேசன்துறை வீதி,**
**யாழ்ப்பாணம்.**

# நூல் விபரம்


✦ நூல் : சைவநெறி
✦ ஆசிரியர் : கவிஞர் த. துரைசிங்கம்
✦ திருத்திய முதற் பதிப்பு : மார்ச் 2011


✦ (c) பதிப்புரிமை : நூலாசிரியருக்கு


✦ பதிப்பாளர் : ஸ்ரீ லங்கா புத்தகசாலை,
234, காங்கேசன்துறை வீதி,
யாழ்ப்பாணம்.

கொழும்பில் அச்சிட்டு வெளியிடுவோர்:
லங்கா புத்தகசாலை,
F.L. 1-14, டயஸ் பிளேஸ்,
குணசிங்கபுர,
கொழும்பு 12.
T.P. : 2341942



## பாலர் விரும்பும் புதிய நூல்கள்

* பாப்பாக் கதைகள்
* பாடம் புகட்டும் பாப்பாக் கதைகள்.
* பாடு பாப்பா
* பாட்டுப் பாடுவோம்
* பாலர் தமிழ்
* பாலர் தமிழ் மலர்
* மலரும் மலர்கள்

**விற்பனையாளர்:**

**ஸ்ரீலங்கா புத்தகசாலை,**
F.L. 1-14, டயஸ் பிளேஸ்,
குணசிங்கபுர,
கொழும்பு 12.

உ

# 1. கடவுளை வணங்குவோம்



### சிவபெருமான்

சிவபெருமான் முழுமுதற் கடவுள்.

எல்லா உயிர்களையும் காப்பவர் அவரே.

சிவபெருமானை எப்பொழுதும் வணங்குவோம்.

### உமாதேவியார்

உமாதேவியார் உலக மாதா.

உயிர்கள் அனைத்திற்கும் இவரே தாயாவார்.

பார்வதி, பரமேஸ்வரி, முத்துமாரி என்று பல பெயர்களால் இவரை அழைப்போம்.



பிள்ளையார், முருகன் சிவபெருமானின் திருக்குமாரர்கள்.

பிள்ளையார் பெருமை வாய்ந்தவர்.

சித்தியைத் தருபவர் பிள்ளையார்.

சித்திவிநாயகர் என்னும் பெயரும் இவருக்கு உண்டு.



முருகன் என்றால் அழகன்.

முருகன் அழகுத் தெய்வம்.

அவன் கையில் வேல் உண்டு.

வேல்முருகா, வேல்முருகா என்று முருகனை அழைப்போம்.

நாங்கள் கடவுளின் குழந்தைகள்.

கடவுள் என்றும் எங்களைக் காப்பார்.

அவர் அன்பு உள்ளவர்.

கடவுளைப் போற்றி வணங்குவோம்.

செயல்:

1. **தொடர்புபடுத்துங்கள்**

| | |
|---|---|
| முழுமுதற் கடவுள் | பார்வதி |
| அழகுத் தெய்வம் | சித்தி விநாயகர் |
| உமாதேவியார் | சிவபெருமான் |
| பிள்ளையார் | முருகன் |
| சித்தியைத் தருபவர் | ஆனைமுகம் உடையவர் |

2. **பொருத்தமான சொல்லை இடைவெளியில் எழுதுங்கள்**

அ. சிவபெருமான் முழுமுதற் .............................. (கடவுள் / அழகன்)

ஆ. சிவபெருமான் உயிர்கள் அனைத்துக்கும் .............................. (தந்தை / மகன்)

இ. பிள்ளையார், முருகன் சிவபெருமானின் திருக் .............................. (குமாரர்கள் / தலைவர்கள்)

ஈ. சித்தியைத் தருபவர் .......................... (முருகன் / பிள்ளையார்)

உ. எந்நாளும் ........................ வணங்குவோம். (கடவுளை / உடலை)

3. **பார்த்து எழுதுங்கள்.**

**கடவுளை வணங்குவோம்.**

..............................................................................................

..............................................................................................

# 2. பிள்ளையார்



பிள்ளையாரை முதலில் வணங்க வேண்டும்.

அவரே முதல் வணக்கத்துக்கு உரியவர்.

பிள்ளையாரை விநாயகர், கணபதி, ஐங்கரன், விக்கினேசுவரர் என்றெல்லாம் அழைப்போம்.

பிள்ளையாரை நினைத்துத் தேங்காய் உடைப்போம்.

பிள்ளையாருக்கு அறுகம்புல், பூக்கள் வைத்து வணங்குவோம்.

அவருக்கு அப்பம், முப்பழம், அமுது, கடலை, அவல், பால், தேன் என்பனவற்றைப் படைப்போம்.

**அப்பம், முப்பழம், அமுது செய்தருளிய**
**தொப்பை அப்பனைத் தொழ வினை அறுமே.**

பிள்ளையாரின் முன், தலையில் மூன்று முறை குட்டித் தோப்புக்கரணம் போடுவோம்.

தோத்திரம் பாடி வணங்குவோம்.

செயல்:

1. **தொடர்புபடுத்துங்கள்.**

| | |
|---|---|
| ஐந்து கைகளை உடையவர் | மோதகம், அவல், கடலை |
| முப்பழம் | விநாயகர் |
| முதல் வணக்கத்திற்கு உரியவர் | ஐங்கரன் |
| தொப்பை அப்பன் | பிள்ளையார் |
| பிள்ளையாருக்குப் படைப்பவை | மாம்பழம், வாழைப்பழம், பலாப்பழம் |

2. **பொருத்தமான சொல்லை இடைவெளியில் எழுதுங்கள்.**

அ. ................................... அறுகம்புல், பூக்கள் வைத்து வழிபடுவோம். (பிள்ளையாருக்கு / முருகனுக்கு)

ஆ. பிள்ளையாரை நினைத்து ................................... உடைப்போம். (மாங்காய் / தேங்காய்)

இ. பிள்ளையாரை ................................... போட்டு வணங்குவோம். (தோப்புக்கரணம் / மண்டியிட்டு)

ஈ. தலையில் ................................... குட்டித் தோப்புக்கரணம் போடுவோம். (ஐந்து முறை / மூன்று முறை).

உ. பிள்ளையார் ................................... தருபவர். (சித்தி / பக்தி)

3. **பார்த்து எழுதுங்கள்.**

**ஆனைமுகன் அருள் தருவார்**

...................................................................................................

...................................................................................................

# 3. கனம் பண்ணுவோம்



அம்மா, அப்பா எங்கள் பெற்றோர்.

பெற்றோரே எங்கள் கண்கண்ட தெய்வங்கள்.

**அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம்.**

அவர்கள் எம்மைப் பெற்று வளர்ப்பவர்கள்.

எம்மைப் பேணிக் காப்பவர்கள்.

எம்மைப் படிக்க வைப்பவர்கள்.

அவர்களை ஒருநாளும் மறக்க மாட்டோம்.

**தாயிற் சிறந்த ஒரு கோயிலும் இல்லை.**
**தந்தை சொல்மிக்க மந்திரம் இல்லை.**


அவர்கள் சொற்கேட்டு நடப்போம்.

தாய், தந்தையரைத் தினமும் வணங்குவோம்.

அவர்களை என்றும் மதித்துப் போற்றுவோம்.



நாம் கல்வி கற்க உதவுபவர் ஆசிரியர்.
அறிவை வளர்க்க உதவுபவர் ஆசிரியர்.
ஆசிரியரை நாம் மதித்தல் வேண்டும்.
பெரியோர் புத்திமதி கூறுபவர். ஒழுக்கம் காப்பவர்.
பெரியோரை மதித்தல் வேண்டும்.



**மூத்தோர் சொல் வார்த்தை அமுதம்.**

மூத்தோர் நல்வழி காட்டுபவர்.
மூத்தோரிடம் அன்பு காட்ட வேண்டும்.
ஆசிரியர், பெரியோர், மூத்தோர் அனைவரையும் மதிப்போம்.
அவர்கள் காட்டும் நல்வழியில் நடப்போம்.

**மாதா, பிதா, குரு தெய்வம்**
**அவர் மலரடி நாளும் வணங்கிடுவோம்.**

**செயல்:**

**1. தொடர்புபடுத்துங்கள்.**

| | |
|---|---|
| குரு | மூத்தோர் |
| பெரியோர் | பெற்றோர் |
| மாதா | வார்த்தை அமுதம் |
| பெற்றோரை | ஆசிரியர் |
| தந்தை | கனம் பண்ணுவோம் |
| பெரியோரை | புத்திமதி கூறுபவர் |
| எம்மைப் பேணிக் காப்போர் | தெய்வம் |
| கல்வி கற்பிப்பவர் | பிதா |
| நல்வழி காட்டுவோர் | வணங்குவோம் |
| மூத்தோர் சொல் | தாய் |

**2. பொருத்தமான சொல்லை இடைவெளியில் எழுதுங்கள்.**

அ. தினமும் .................................. வணங்குவோம் (பெற்றோரை / சிறியோரை)

ஆ. தந்தை சொல் மிக்க .............................. (கோயிலில்லை / மந்திரமில்லை)

இ. பெரியோரைக் .................................... பண்ணுவோம் (கனம் / தனம்)

ஈ. நமக்கு நல்வழி காட்டுபவர் ................................ (பெரியோர் / மூத்தோர்)

உ. புத்திமதி கூறுபவர் ................................................ (மூத்தோர் / பெரியோர்)

ஊ. மாதா, பிதா, குரு, தெய்வம் அனைவரையும் ..................................................
(மதிப்போம் / வெறுப்போம்)

**3. பொருத்தமான சொல்லைக் கூட்டினுள் எழுதுங்கள்.**

அ. தாயைக் குறிக்கும் ஒரு சொல்

ஆ. முழுமுதற் கடவுள்

இ. பெரியோரை மதித்தல் நமது

ஈ. எல்லோரிடமும் இருக்க வேண்டியது

| | | |
|---|---|---|
| அ | .......... | னை |
| சி | வ | .......... |
| க | .......... | மை |
| .......... | ன் | பு |

**4. சரியாயின் "✓" எனவும் பிழையாயின் "×" எனவும் அடையாளம் இடுங்கள்.**

அ. அம்மா, அப்பா எம் கண்கண்ட தெய்வங்கள். ( )

ஆ. பெற்றோர் சொற்கேட்டு நடத்தல் வேண்டும். ( )

இ. மூத்தோரை மதித்தல் வேண்டும் . ( )

ஈ. குரு என்று அழைக்கப்படுபவர் ஆசிரியர். ( )

உ. பெரியோரைக் கனம் பண்ணுதல் கூடாது. ( )

**5. பார்த்து எழுதுங்கள்**

**மூத்தோர் சொல் வார்த்தை அமுதம்**

......................................................................................................................................

# 4. தோத்திரப் பாடல்கள் 1

## தேவாரம்

திருச்சிற்றம்பலம்

பண்: கௌசிகம்

காதலாகிக் கசிந்து கண்ணீர் மல்கி
ஓதுவார் தமை நன்னெறிக் குய்ப்பது
வேதம் நான்கினும் மெய்ப் பொருளாவது
நாதன் நாமம் நமச்சிவாயவே.

பண்: சாதாரி

தலையே நீ வணங்காய் - தலை
மாலை தலைக் கணிந்து
தலையா லேபலி தேருந் தலைவனைத்
தலையே நீ வணங்காய்.

## பெரியபுராணம்

மண்ணிற் பிறந்தார் பெறும்பயன் மதிசூடும்
அண்ணலார் அடியார் தமை அமுது செய்வித்தல்
கண்ணினால் அவர் நல் விழாப்பொலிவு கண்டார்தல்
உண்மையாம் எனில் உலகர்முன் வருகென உரைத்தார்.

திருச்சிற்றம்பலம்

| | |
|---|---|
| நமப் பார்வதி பதயே<br>அரகர மகா தேவா!<br>சிற் சபேசா<br>சிவ சிதம்பரம் | தென்னாடுடைய சிவனே போற்றி<br>எந்நாட்டவர்க்கும் இறைவா போற்றி<br>இன்பமே சூழ்க!<br>எல்லோரும் வாழ்க! |

## செயல்:

### 1. தொடர்புபடுத்துங்கள்:

| | |
|---|---|
| நாதன் நாமம் | பாடுவோர் |
| நமச்சிவாய | நான்கு |
| தலையாலே பலி தேருபவன் | நமச்சிவாய |
| வேதம் | இறைவன் |
| ஓதுவார் | ஐந்தெழுத்து |
| தலைவன் | சிவபெருமான் |
| மதி | சோறு |
| அமுது | சிவன் |
| மதிசூடுபவன் | சந்திரன் |

### 2. விடை எழுதுங்கள்

அ. மெய்ப்பொருளாவது எது? ..............................................................................

ஆ. நாதன் நாமம் எது? ..............................................................................

இ. தலையாலே பலி தேருபவன் யார்? ..............................................................................

ஈ. தலையாலே வணங்க வேண்டியவன் யார்? ..............................................................................

உ. அண்ணலார் யார்? ..............................................................................

ஊ. அவரது அடியாரை எப்படி அழைப்போம்? ..............................................................................

### 3. பொருத்தமான சொல்லை இடைவெளியில் எழுதுங்கள்.

அ. கண்ணீர் மல்கி ஓதுவார் .............................. சேர்வர். (நன்னெறி / புன்நெறி)

ஆ. தேவாரம் இறைவனுக்குச் சாத்தும் .............................................. ஆகும். (பூமாலை / பாமாலை)

இ. .............................................. பலிதேருந் தலைவனை தலையே நீ வணங்கு. (தலையாலே / தலைமாலை)

ஈ. சிவனடியாருக்குத் ........ அளித்தல் வேண்டும். (குறையமுது / திருவமுது)

உ. மதிசூடும் அண்ணலார் .............................. (பிள்ளையார் / சிவபெருமான்)

### 4. சரியாயின் "✓" எனவும் பிழையாயின் "×" எனவும் அடையாளம் இடுங்கள்.

அ. தேவாரங்களைப் பத்தியுடன் ஓதுதல் வேண்டும். ( )

ஆ. பக்தியோடு படிப்பவர் நன்நெறி சேர்வர். ( )

இ. மண்டை ஓட்டில் பிச்சை ஏற்பவன் முருகன் ( )

ஈ. சிவனடியார்களுக்கு அன்னம் வழங்கக் கூடாது. ( )


உ. பிறைச் சந்திரனைச் சடாமுடியில் தரித்தவர் சிவன் ( )

### 5. பார்த்து எழுதுங்கள்.

**நாதன் நாமம் நமச்சிவாயவே.**

..............................................................................

# 5. மண் சுமந்த கதை



மதுரையில் வைகை ஆறு பெருகியது.

வெள்ளம் பெருக்கெடுத்து ஓடியது.

இதனால் மக்கள் பயந்தனர்.

அரசன் இருக்கும் அரண்மனையை நோக்கி ஓடினார்கள்.

தங்கள் குறையினைத் தெரிவித்தனர்.

அரசன் : அமைச்சரே! ஆறு திடீரெனப் பெருகியது ஏன்? என்ன பிழை நடந்தது? இப்போது என்ன செய்யலாம்?

அமைச்சர் : அரசே! வெள்ளம் பெருகியதால் மக்கள் அவதி யுறுகின்றனர். வெள்ளப் பெருக்கைத் தடுக்க உடன் அணை கட்ட வேண்டும்.

அரசர் : அப்படியா? உடனே மக்களுக்கு அறிவியுங்கள். ஒவ்வொருவரும் அணை கட்டும் வேலையில் ஈடுபட வேண்டும். ஒவ்வொருவரும் கட்ட வேண்டிய பங்கை அளந்து கொடுங்கள்.

அணை கட்டுவதற்கு மண்வெட்டி, கூடையுடன் ஆற்றங்கரைக்கு வருமாறு அறிவியுங்கள்.

அமைச்சர் : அப்படியே அறிவிக்கிறேன் அரசே!



மதுரையில் செம்மனச்செல்வி என்னும் மூதாட்டி வசித்து வந்தார்.
அவரை வந்தி என்றும் அழைப்பர்.
அவருக்கு உறவினர் எவரும் இல்லை.
அவரும் அணை கட்ட வேண்டியிருந்தது.
யாரும் உதவிக்குக் கிடைக்கவில்லை.



தாம் வணங்கும் கோயிலுக்குச் சென்றார்.
சிவபெருமானிடம் முறையிட்டார்.



அடியவரின் குறை தீர்க்கச் சிவபெருமான் விரும்பினார்.

கூலியாளாக வேடம் பூண்டு வந்தார்.

கூலியாக என்ன தருவீர்கள்? என்று கேட்டார்.

பிட்டு விற்றுக் கூலி தருவேன் என்றாள் மூதாட்டி.


சரி, சரி, பிட்டையே கூலியாகத் தாருங்கள் என்றார் கூலியாள்.

பிட்டைக் கொடுத்தார் மூதாட்டி.

ஆற்றங்கரைக்கு அழைத்துச் சென்று தன் பங்கைக் காட்டினார்.



கூலியாளான சிவபெருமான் ஒரு கூடையை எடுத்தார்.
மண்ணை வெட்டினார். கூடையில் சுமந்து சென்று கொட்டினார்.
பின்னர் பிட்டை உண்டார். பாடினார். ஆடினார்.
மரநிழலில் படுத்துறங்கினார்.



காவலாளர்கள் அணைகட்டும் வேலையைப் பார்வையிட வந்தனர். குறிப்பிட்ட இடத்தில் உரிய பங்கு அடைக்கப்படாது இருப்பதையும் கூலியாள் படுத்துத் தூங்குவதையும் கண்டனர்.

அரசனிடம் முறையிட்டனர். அரசர் வந்தார், விசாரித்தார்.

படுத்துத் தூங்கும் கூலியாளைப் பார்த்தார். கோபம் கொண்டார்.



பிரம்பினால் ஓங்கி முதுகில் அடித்தார்.

என்ன அதிசயம்! கூலியாள் மறைந்தார்.

கூலியாள் முதுகில் பட்ட அடி மன்னன் உட்பட எல்லோர் முதுகிலும் பட்டது. மன்னர் திகைத்தார்.

கூலியாளாக வந்தவர் சிவபெருமான் என்பதை உணர்ந்தார்.

சிவபெருமானின் திருவிளையாடலே இது என எல்லோரும் உணர்ந்தனர்.



**கடவுள் எங்கும் நிறைந்தவர்.**
**திக்கற்றவர்க்குத் தெய்வமே துணை.**

**செயல்:**

**1. தொடர்புபடுத்துங்கள்.**

| | |
|---|---|
| வைகை | அணைகட்ட வேண்டும். |
| வந்தி | சிவபெருமான் |
| ஆறு பெருகியது | ஆறு |
| கூலியாள் | பிட்டு விற்பவள் |
| கூலி | மூதாட்டி |
| வெள்ளத்தைத் தடுக்க | மக்கள் பயந்தனர் |
| செம்மனச் செல்வி | பிட்டு |

**2. பொருத்தமான சொல்லை இடைவெளியில் எழுதுங்கள்.**

அ. வைகை ஆற்றில் ...................................... பெருகியது.
ஆ. அணை கட்ட வருமாறு ........................ அழைத்தான்.
இ. செம்மனச்செல்வி ........................ விற்றுச் சீவித்தார்.
ஈ. கடவுள் எங்கும் ..........................................................
உ. கூலியாள் மீது பட்ட அடி எல்லோர் மீதும் ...............

| |
|---|
| பட்டது. |
| பிட்டு |
| இருப்பார். |
| வெள்ளம் |
| அரசன் |

**3. சரியாயின் "✓" எனவும் பிழையாயின் "×" எனவும் அடையாளம் இடுங்கள்.**

அ. வைகை ஆறு மதுரையில் உள்ளது. ( )
ஆ. அணை கட்ட எவரும் வரவில்லை ( )
இ. செம்மனச்செல்வி சிவபெருமானிடம் முறையிட்டார். ( )
ஈ. சிவபெருமான் அமைச்சராக வந்தார். ( )
உ. அரசன் கூலியாள் முதுகில் பிரம்பினால் அடித்தான். ( )
ஊ. கூலியாளாக வந்தவர் சிவபெருமான் அல்ல. ( )
எ. திக்கற்றவருக்குத் தெய்வமே துணை. ( )

**4. விடை எழுதுங்கள்.**

அ. பிட்டு விற்ற மூதாட்டியின் பெயர் என்ன?..........................................
ஆ. கூலியாளுக்குக் கிடைத்த கூலி என்ன? ..........................................
இ. பிரம்படி பட்டவர் யார்? ..........................................
ஈ. பிரம்படி கொடுத்தவர் யார்? ..........................................

**5. பார்த்து எழுதுங்கள்.**

**கடவுள் எங்கும் நிறைந்தவர்.**

..........................................................................................

..........................................................................................

# 6. தோத்திரப் பாடல்கள் - II

## தேவாரம்

திருச்சிற்றம்பலம்

பண்: இந்தளம்

பித்தா பிறைசூடி பெருமானே அருளாளா
எத்தான் மறவாதே நினைக்கின்றேன் மனத்துன்னை
வைத்தாய் பெண்ணைத் தென்பால் வெண்ணெய் நல்லூர் அருட்டுறையுள்
அத்தாவுனக் காளாய் இனி அல்லேன் எனலாமே

## திருவாசகம்

பூசுவதும் வெண்ணீறு பூண்பதுவும் பொங்கரவம்
பேசுவதும் திருவாயால் மறைபோலும் காண் ஏடி!
பூசுவதும் பேசுவதும் பூண்பதுவும் கொண்டென்னை
ஈசன் அவன் எவ்வுயிர்க்கும் இயல்பானான் சாழலோ.

## திருமந்திரம்

ஐந்து கரத்தனை ஆனை முகத்தனை
இந்தின் இளம்பிறை போலும் எயிற்றனை
நந்தி மகன்றனை ஞானக் கொழுந்தினைப்
புந்தியில் வைத்தடி போற்றுகின்றேனே.

## கந்தபுராணம்

மூவிரு முகங்கள் போற்றி முகம்பொழி கருணை போற்றி
ஏவருந் துதிக்க நின்ற ஈராறு தோள்கள் போற்றி
காஞ்சி மாவடி வைகுஞ் செவ்வேள் மலரடி போற்றி அன்னான்
சேவலும் மயிலும் போற்றி திருக்கைவேல் போற்றி போற்றி.

## பெரிய புராணம்

உலகெலா முணர்ந் தோதற் கரியவன்
நிலவு லாவிய நீர்மலி வேணியன்
அலகில் சோதியன் அம்பலத் தாடுவான்
மலர் சிலம்படி வாழ்த்தி வணங்குவாம்.

திருச்சிற்றம்பலம்.

**செயல்:**

## 1. தொடர்புபடுத்துங்கள்.

| | |
|---|---|
| பிறைசூடி | வெண்ணீறு |
| ஐந்துகரத்தன் | பொங்கரவம் |
| பூசுவது | சிவபெருமான் |
| புந்தி | பிள்ளையார் |
| பூண்பது | பல்லு-தந்தம் |
| எயிறு | மனம் |
| செவ்வேள் | ஆனைமுகன் |
| பிள்ளையார் | முருகன் |

## 2. பொருத்தமான சொல்லை இடைவெளியில் எழுதுங்கள்.

அ. சிவபெருமானைச் சுந்தரர் .............................. என்று அழைத்தார்.
ஆ. திருவாசகம் பாடியவர் ..............................
இ. திருமந்திரம் திருமூலரால் ..............................
ஈ. முருகனது கையில் .............................. உண்டு.
உ. .............................. எவ்வுயிர்க்கும் இயல்பாவான்.

மாணிக்கவாசகர் / பித்தா / வேல் / அருளப்பட்டது / ஈசனவன்

## 3. விடை எழுதுங்கள்.

அ. பித்தன் என்பதன் பொருள் என்ன? ..............................
ஆ. பிறை சூடி யார்? ..............................
இ. பாம்பினை அணிந்திருப்பவர் யார்? ..............................
ஈ. முருகனது வாகனம் எது? ..............................
உ. உலகெல்லாம் உணர்ந்து ஓதற்கு அரியவர் யார்? ..............................
ஊ. அம்பலத்தே ஆடுபவர் பெயர் என்ன? ..............................

## 4. சரியாயின் "✓" எனவும் பிழையாயின் "×" எனவும் அடையாளம் இடுங்கள்.

அ. நந்தி மகன் என்று அழைக்கப்படுபவர் பிள்ளையார் ( )
ஆ இந்தின் இளம் பிறை என்பது யானை முகத்தை. ( )
இ. நீர்மலி வேணியன் முருகன். ( )
ஈ. பன்னிரு தோள்கள் கொண்டவன் முருகன். ( )
உ. வெண்ணீறு என்பது குங்குமம் ஆகும். ( )

## 5. பார்த்து எழுதுங்கள்.

**மூவிரு முகங்கள் போற்றி.**

..............................

# 7. சித்திரைப் புதுவருடம்



இன்று சித்திரைப் புதுவருடப் பிறப்பு.

வீட்டைக் கழுவி மெழுகிச் சுத்தம் செய்வோம்.


வீட்டை அலங்கரிப்போம்.

மாவிலைத் தோரணம் இடுவோம்.

மருத்து நீர் வைத்து நீராடுவோம்.

புதிய ஆடைகள் அணிவோம்.

முற்றத்தில் கோலம் இடுவோம்.



குத்து விளக்கேற்றி நிறைகுடம் வைப்போம்.

கடவுளை வணங்குவோம்.

சுபநேரத்தில் புதுவருடத்தை வரவேற்போம்.


பெற்றோரை, பெரியோரை வணங்குவோம்.

ஆசி பெறுவோம்.

முற்றத்தில் பொங்கல் செய்வோம்.

சூரியனுக்குப் படையல் இடுவோம்.

தேவாரங்கள் பாடித் துதிப்போம்.



கோவிலுக்குச் செல்வோம்.

அர்ச்சனை செய்விப்போம்.

கடவுளை வணங்குவோம்.

வீட்டில் விருந்தினரை உபசரிப்போம்.

விருந்தினருக்கு உணவளிப்போம்.

ஏழைகளுக்குத் தருமம் செய்வோம்.

உறவினர் நண்பர் வீடுகளுக்குச் செல்வோம்.

புதுவருட நல்வாழ்த்துக் கூறுவோம்.



சிறுவர்களுடன் சேர்ந்து விளையாடுவோம்.
புதுவருட விளையாட்டுப் போட்டியில் பங்கு கொள்வோம்.

**செயல்:**

**1. தொடர்புபடுத்துங்கள்.**

| | |
|---|---|
| சித்திரை | இடுவோம் |
| வீட்டைச் சுத்தம் | கூறுவோம் |
| மருத்துநீர் | நிறைகுடம் |
| முற்றம் | அணிவோம் |
| தோரணம் | செய்வோம் |
| விருந்தினரை | நீராடுதல் |
| மாவிலை | வருடப்பிறப்பு |
| புத்தாடை | பொங்கல் |
| பெற்றோரை | உபசரிப்போம் |
| புதுவருட வாழ்த்துக்கள் | வணங்குவோம் |

## 2. பொருத்தமான சொல்லை இடைவெளியில் எழுதுங்கள்

அ. சுபநேரத்தில் மருத்து நீர் வைத்து ........................................................
(நீராடுவோம் / பொங்கலிடுவோம்)

ஆ. சூரியனுக்குப் ......................... இடுவோம். (படையல் / பொங்கல்)

இ. ......................... உபசரிப்போம். (விருந்தினரை / விருந்தினருக்கு)

ஈ. ஏழை மக்களுக்குத் தருமம் ........................................................
(செய்வோம் / செய்யோம்)

உ. புதுவருட விளையாட்டுப் போட்டிகளில் பங்கு ................................
(கொள்ளமாட்டோம் / கொள்வோம்)

## 3. சரியாயின் "✓" எனவும் பிழையாயின் "×" எனவும் அடையாளம் இடுங்கள்.

அ. மாவிலைத் தோரணம் போடுவோம். ( )

ஆ. சுபநேரத்தில் கைவிசேஷம் வாங்குவோம். ( )

இ. விருந்தினரை உபசரிக்க மாட்டோம். ( )

ஈ. ஏழைகளுக்குத் தருமம் கொடுப்போம். ( )

உ. உறவினர் வீடுகளுக்குச் செல்வோம். ( )

## 4. விடை எழுதுங்கள்.

அ. எந்த மாதத்தில் வருடப்பிறப்பு கொண்டாடப்படும்? ........................

ஆ. புதுவருடப்பிறப்பன்று நீங்கள் என்ன செய்வீர்கள்?..........................

இ. புதுவருடப் பிறப்பன்று நிகழும் இரு செயல்கள் எழுதுங்கள்.

..................................................................................................

..................................................................................................

ஈ. முற்றத்தில் என்ன செய்வர்? ..........................................................

உ. உறவினர்களுக்கு என்ன கூறுவார்கள்? ...........................................


## 5. பார்த்து எழுதுங்கள்.

**சுபநேரத்தில் புதுவருடத்தை வரவேற்போம்.**

..................................................................................................

..................................................................................................

# 8. கோயிலுக்குச் செல்வோம்



இன்று வெள்ளிக்கிழமை.


கோயிலுக்குப் போக வேண்டும்.

நீராடுவோம். தோய்த்து உலர்ந்த ஆடை அணிவோம்.

திருநீறு பூசுவோம்.

அருச்சனைப் பொருட்களை எடுப்போம்.

அப்பா, அம்மாவுடன் கோயிலுக்குச் செல்வோம்.




அதோ! கோபுரம் தெரிகிறது.

கோபுரத்தை முதலில் வணங்குவோம்.

கோயில் குளத்தில் கை, கால் கழுவுவோம்.

கோயிலின் உள்ளே செல்வோம்.

கடவுளை நினைத்து வீழ்ந்து வணங்குவோம்.



முதலில் பிள்ளையாரை வணங்குவோம்.

மூன்றுமுறை சிரசில் குட்டித் தோப்புக்கரணம் போட்டு வணங்குவோம்.

பூசை நடைபெறுகிறது.

மூலத்தானத்தில் உள்ள இறைவனை வணங்குவோம்.

கோயிலை மும்முறை வலம் வருவோம்.

ஏனைய தெய்வங்களையும் வணங்குவோம்.

அருச்சனை செய்வோம். தேவாரம் பாடித் துதிப்போம்.

**ஆலயத்தில் அமைதி பேணுவோம்.**

செயல் :

1. **தொடர்புபடுத்துங்கள்.**

| | |
|---|---|
| கோயில் | பூசுவோம் |
| மூலத்தானம் | கோபுரம் |
| திருநீறு | கோயில்குளம் |
| கை, கால் கழுவுதல் | மூலமூர்த்தி |

2. **விடையெழுதுங்கள்.**

அ. கோயிலுக்குப் புறப்படுமுன் என்ன செய்வீர்கள்?

.......................................................................................................

ஆ. கோயிலின் உள்ளே சென்றதும் என்ன செய்வீர்கள்?

.......................................................................................................

இ. முதலில் யாரை வணங்க வேண்டும்?

.......................................................................................................

ஈ. கோயிலை எத்தனை முறை வலம் வருவீர்கள்?

.......................................................................................................

உ. பூசை நடைபெறும் போது என்ன செய்வீர்கள்?

.......................................................................................................

3. **பொருத்தமான எழுத்தைக் கூட்டினுள் எழுதுங்கள்.**

அ. நீராடிய பின்னர் நெற்றியில் அணிவது

ஆ. அதோ! உயரமாகத் தெரிவது

இ. இறைவனைத் துதித்துப் பாடுவது

ஈ. பிள்ளையாரை நினைத்து உடைப்பது

| | | | |
|---|---|---|---|
| தி | ........ | நீ | ........ |
| கோ | ........ | ர | ........ |
| தே | வா | ........ | ........ |
| ........ | ங் | கா | ........ |

4. **பார்த்து எழுதுங்கள்.**

**ஆலயம் தொழுவது சாலவும் நன்று.**

.......................................................................................................

.......................................................................................................

# 9. கோயில் தொண்டுகள்

நாம் இறைவனை வழிபடும் இடம் கோயில்.
கோயிலுக்குத் தினமும் சென்று வழிபடல் நன்று.
கோயிலில் தொண்டுகள் செய்வோம். கோயில் தொண்டுகள் பல.
கோயிலைக் கூட்டலாம். கோயில் மண்டபங்களை கழுவலாம்.



கோயில் விளக்குகள் பாத்திரங்களை மினுக்கலாம்.
பூந்தோட்டம் வைக்கலாம்.
பூமரங்கள் பல நாட்டலாம்.
பூமரங்களுக்கு நீர் ஊற்றலாம்.
பூப்பறித்துக் கொடுக்கலாம்.
பூமாலை கட்டலாம். தோரணம் கட்டலாம்.
மணி அடிக்கலாம். தோத்திரம் பாடலாம்.
இவை எல்லாம் கோயில் தொண்டுகளாகும்.

**கோயில் தொண்டு செய்வோம்.**
**இறைவனை என்றும் வழிபடுவோம்.**

**செயல்:**

**1. தொடர்புபடுத்துங்கள்.**

| | |
|---|---|
| இறைவனை வழிபடும் இடம் | கோயில் தொண்டு |
| கோயிலுக்குத் தினமும் | பாடுவோம் |
| கோயிலைக் கூட்டுதல் | நாட்டுவோம் |
| பூமரங்கள் | கோயில் |
| தோத்திரம் | செல்வோம் |

**2. பொருத்தமான சொல்லை இடைவெளியில் எழுதுங்கள்.**

அ. நாம் வழிபடும் இடம் ........................................ (வீடு / கோயில்)
ஆ. தினமும் கோயிலுக்குச் செல்வது ........................ (நல்லது / கூடாது)
இ. கோயில் தொண்டுகள் ........................................(உண்டு / இல்லை)
ஈ. காலையும் மாலையும் கடவுளைத் ............ (மறப்போம் / துதிப்போம்)
உ. ................ கட்டி இறைவனுக்குச் சூட்டுவோம். (பூமாலை / பாமாலை)

**3. பார்த்து எழுதுங்கள்.**

கோயில் தொண்டு செய்வோம்.

..............................................................................................

# 10. கல் தெப்பமானது



திருநாவுக்கரசர் சைவ சமயத்தை விட்டுச் சமண சமயத்தை சேர்ந்தார்.

அவரின் தமக்கையார் திலகவதியார்.

அவர் தம்பியாரின் இச்செயலைக் கண்டு மனம் வருந்தினார்.

சிவபெருமானிடம் முறையிட்டார்.

திருநாவுக்கரசருக்குச் சூலை நோய் வந்தது.

வயிற்றுவலி தாங்க முடியாது துடித்தார்.

சமண சமயத்தவரால் அந்நோயை மாற்ற முடியவில்லை.

தமக்கையாரிடம் சென்றார். நோய் பற்றிக் கூறினார்.

"தம்பி! கோயிலுக்குப் போவோம் வா" என்றார் திலகவதியார்.


இருவரும் கோயிலுக்குச் சென்றனர்.



"தம்பி! இந்தா திருநீறு பூசிக்கொள். இறைவனை வணங்கு". என்றார் அக்கா.

திருநாவுக்கரசர் திருநீற்றைப் பூசினார். இறைவனை நோக்கி, கூற்றாயினவாறு..... எனத் தொடங்கும் தேவாரப் பதிகம் பாடினார். சூலை நோய் முற்றாக நீங்கியது.

சமண சமயத்தவர் திருநாவுக்கரசர் மீது கோபம் கொண்டனர். அரசனிடம் முறையிட்டனர். அரசன் கோபம் கொண்டான். பல தண்டனைகள் கொடுத்தான்.



இறைவன் திருவருளால் திருநாவுக்கரசருக்கு எவ்வித தீங்கும் நிகழவில்லை.

கடைசியில் திருநாவுக்கரசரைக் கல்லுடன் கட்டிக் கடலில் போட்டனர். அவர் சிவபெருமானை நினைத்து சொற்றுணை வேதியன்...... என்ற தேவாரப் பதிகம் பாடினார்.

இறைவன் திருவருளால் கல் தெப்பமாக மிதந்தது.
திருநாவுக்கரசர் சுகமாகக் கரைசேர்ந்தார்.

“சொற்றுணை வேதியன் சோதி வானவன்
பொற்றுணை திருந்தடி பொருந்தக் கைதொழக்
கற்றுணைப் பூட்டியோர் கடலிற் பாய்ச்சினும்
நற்றுணையாவது நமச்சிவாயவே”.

செயல்:

## 1. தொடர்புபடுத்துங்கள்.

| | |
|---|---|
| திருநாவுக்கரசர் | நெற்றி |
| கல் | சூலைநோய் |
| வயிற்றுவலி | கூற்றாயினவாறு |
| தேவாரம் | தெப்பமானது |
| திருநீறு | சமணசமயம் |

## 2. பொருத்தமான சொல்லை இடைவெளியில் எழுதுங்கள்.

அ. திருநாவுக்கரசரை ........................................ வருத்தியது.
ஆ. திலகவதியார் சிவபக்தி ........................................
இ. தமக்கையார் ........................................ கொடுத்தார்.
ஈ. சமணர்கள் ........................................ கொண்டனர்.
உ. கல்லோடு கட்டிக் ........................................ போட்டனர்.
ஊ. நற்றுணையாவது ........................................ என்று பாடினார்.

| |
|---|
| திருநீறு |
| கோபம் |
| நமச்சிவாயவே |
| கடலில் |
| சூலைநோய் |
| மிக்கவர் |

## 3. விடை எழுதுங்கள்

அ. திருநாவுக்கரசரின் தமக்கையார் யார்? ........................................
ஆ. தம்பியாரை அவர் கோயிலுக்குக் கூட்டிப் போனது ஏன்?
........................................

இ. தம்பியாரிடம் அவர் பூசக் கொடுத்தது என்ன? ........................................
ஈ. அதனைப் பூசிய பின்னர் திருநாவுக்கரசர் என்ன செய்தார்?
........................................

உ. கடலில் போடப்பட்ட திருநாவுக்கரசர் எவ்வாறு கரை சேர்ந்தார்?
........................................

## 4. சரியாயின் "✓" எனவும் பிழையாயின் "×" எனவும் அடையாளம் இடுங்கள்


அ. திருநாவுக்கரசர் சமண சமயத்திற் சேர்ந்திருந்தார். ( )
ஆ. திலகவதியார் இது குறித்து மனம் வருந்தினார். ( )
இ. சூலைநோய் என்பது வயிற்றுவலி அல்ல. ( )
ஈ. திருநாவுக்கரசர் தேவாரம் பாடினார். ( )
உ. நமச்சிவாய என்பது ஐந்தெழுத்து மந்திரமாகும். ( )
ஊ. இறைவன் அருளால் கல் தெப்பமாகவில்லை. ( )

## 5. பார்த்து எழுதுங்கள்

**நற்றுணையாவது நமச்சிவாயவே.**

........................................

# 11. திருக்கேதீச்சரம்



இலங்கையில் உள்ள சிவத்தலம் திருக்கேதீச்சரம்.

இது தேவாரப் பாடல் பெற்ற தலமாகும்.


மன்னாரில் மாதோட்டத்தில் இத்தலம் உள்ளது.

இங்கு எழுந்தருளியுள்ள இறைவன் பெயர் திருக்கேதீச்சரநாதர்.

இறைவியின் பெயர் கௌரி அம்பாள்.

பாலாவித் தீர்த்தம் இங்கு உள்ளது.

இத் தீர்த்தத்தில் அடியார்கள் நீராடி அருள் பெறுவர்.



மகா சிவராத்திரி இங்கு சிறப்பாக அநுட்டிக்கப்படுகின்றது. அன்று அடியார்கள் தீர்த்தக் காவடி எடுப்பர்.

இவ்வாலயத்தில் பழமையான மகாலிங்கம் உண்டு.

திருக்கேதீச்சரம் செல்வோம்.

மகாலிங்கத்திற்கு நாமும் அபிஷேகம் செய்வோம்.

திருக்கேதீச்சரநாதரை வழிபட்டு அருள் பெறுவோம்.

**செயல்:**

**1. தொடர்பு படுத்துங்கள்.**

| | |
|---|---|
| திருக்கேதீச்சரம் | கௌரி அம்மாள் |
| பாலாவி | அபிஷேகம் |
| மகாசிவராத்திரி | மன்னார் |
| மகாலிங்கம் | தீர்த்தம் |
| திருக்கேதீச்சரநாதர் | சிவத்தலம் |
| மாதோட்டம் | தீர்த்தக்காவடி |

**2. பொருத்தமான சொல்லை இடைவெளியில் எழுதுங்கள்.**

அ. திருக்கேதீச்சரம் .................................. உள்ள சிவத்தலம்.

ஆ. இங்கு திருக்கேதீச்சரநாதர் ..............................................................

இ. பாலாவித் ....................................................................... இங்குண்டு.

ஈ. சிவராத்திரி விழா இங்கு சிறப்பாக ...................................................

உ. சுந்தரமூர்த்தி நாயனார் இத்தலத்தைப் பற்றித் ....................................... பாடியுள்ளார்.

| தீர்த்தம் / தேவாரம் / நடைபெறும் / இலங்கையில் / எழுந்தருளியுள்ளார். |
|---|

**3. விடை எழுதுங்கள்.**

அ. திருக்கேதீச்சரத்தில் உள்ள அம்பிகையின் பெயர் என்ன?.........................

ஆ. தீர்த்தக் காவடி என்பது என்ன?..............................................................

இ. திருக்கேதீச்சரத்தில் சிறப்பாக நடைபெறும் விழா எது? ..........................

ஈ. திருக்கேதீச்சரம் எங்குள்ளது? ...............................................................

**4. பார்த்து எழுதுங்கள்.**

**இறைவனை வழிபடுவோம்.**

..............................................................................................................

# 12. விநாயகர் பெருமை



அசுரர்களின் தலைவன் கஜமுகன். இவன் மிகவும் கொடியவன். தனக்கு முன் ஆயிரம் முறை தலையில் குட்டிக் கும்பிடுமாறு தேவர்களைப் பணித்தான். தேவர்களுக்குப் பல துன்பங்களைச் செய்தான். தேவர்கள் மனம் வருந்தினர்.

விநாயகரிடம் சென்று முறையிட்டனர். தங்கள் துன்பங்களைக் கூறினர். விநாயகர் தேவர் துயர் போக்க விரும்பினார்.

தேவர்களுக்கு அருள்புரிய முன்வந்தார்.

கஜமுகனை அடக்கினார்.

தேவர்கள் மகிழ்ந்தனர்.

அதற்காக அவருக்கு நன்றி தெரிவித்தனர்.

உங்களுக்கு முன் சிரசில் மூன்று முறை குட்டிக் கும்பிடுவோம்.

தோப்புக்கரணம் போடுவோம்.

இந்த வழிபாட்டு முறையினை ஏற்றுக் கொள்ளுங்கள் என்று வேண்டினார். அதனை விநாயகரும் ஏற்றுக்கொண்டார்.

அன்றுமுதல் பிள்ளையாரைத் தோப்புக்கரணம் போட்டு வழிபடுகிறோம்.

**வேழமுகத்து விநாயகனைத் தொழ**
**விக்கினந் தீரும்.**

## செயல்:

### 1. விடை எழுதுங்கள்

அ. அசுரர்களின் தலைவர் யார்? ..........................................................

ஆ. அவன் என்ன செய்தான்? ..........................................................

இ. தேவர்கள் யாரிடம் முறையிட்டார்கள்? ..........................................

ஈ. கஜமுகனை அடக்கியவர் யார்? ..........................................................

உ. தேவர்கள் அதற்கு எவ்விதம் நன்றி தெரிவித்தனர்? ......................

### 2. பொருத்தமான சொல்லை இடைவெளியில் எழுதுங்கள்.

அ. தனக்குமுன் .................................. தலையில் குட்டிக் கும்பிடுமாறு கட்டளையிட்டான்.

ஆ. தேவர்கள் பெருந் துன்பம் ..........................................................

இ. விநாயகர் .......................................................................... அடக்கினார்.

ஈ. தேவர்கள் தோப்புக்கரணம் இட்டு ..................................................

உ. .................................. போட்டு நாமும் விநாயகரை வணங்குவோம்.

| அடைந்தனர் / ஆயிரம்முறை / தோப்புக்கரணம் / கஜமுகனை / வணங்கினார். |
|---|

### 3. பார்த்து எழுதுங்கள்

**விக்கினந் தீர்ப்பவர் விநாயகர்.**

..........................................................................................................

..........................................................................................................

# 13. சைவ மாணவர்



குமரனும் பூரணியும் இரண்டாம் தரத்தில் படிக்கின்றனர்.

அதிகாலையில் நித்திரை விட்டு எழும்புவார்கள்.

காலைக்கடன்களை முடிப்பார்கள். சுத்தமான உடை அணிவார்கள். நெற்றியில் திருநீறு பூசுவார்கள். கடவுளை வணங்குவார்கள். தேவாரம் பாடுவார்கள். பாடம் படிப்பார்கள். சைவ உணவு உண்பார்கள். பாடசாலைக்கு நேரத்துக்குச் செல்வார்கள். காலைப் பிரார்த்தனையில் பங்கு கொள்வார்கள். வகுப்பில் ஆசிரியரை வணங்குவார்கள். அவருக்குக் கீழ்ப்படிந்து நடப்பார்கள். பாடம் படிப்பார்கள். சக மாணவர்களுடன் அன்பாகப் பழகுவார்கள்.

அதிபர், ஆசிரியர் சொற்கேட்டு நடப்பார்கள். ஒழுங்காக விளையாடுவார்கள். பாடசாலை ஒழுங்கைப் பின்பற்றி நடப்பார்கள். பாடசாலை முடிய வீடு செல்வார்கள். மாலையில் விளையாடுவார்கள்.

பின்னர் கால், முகம் கழுவித் திருநீறு பூசுவார்கள்.

கடவுளை வணங்குவார்கள். வெள்ளிக்கிழமைகளில் தவறாது கோயிலுக்குச் செல்வார்கள். பெரியோருக்கு மரியாதை செய்வார்கள்.

எல்லோரிடமும் அன்பாகப் பழகுவார்கள். இரவில் பாடம் படிப்பார்கள். படுக்கைக்குச் செல்லுமுன் திருநீறு பூசி இறைவனைத் தியானிப்பார்கள். நேரத்திற்கு நித்திரை செய்வார்கள்.

**எந்நாளும் சைவ ஒழுக்கம் பேணுவோம்.**

## செயல்:

### 1. தொடர்பு படுத்துங்கள்

| | |
|---|---|
| ஆசிரியரை | பூசுவோம் |
| நமது சமயம் | அணிவோம் |
| ஒழுங்கு | கழுவுவோம் |
| சுத்தமான உடை | சைவம் |
| திருநீறு | வணங்குவோம் |
| கால், முகம் | பேணுவோம். |

### 2. விடை எழுதுங்கள்

அ. குமரனும், பூரணியும் படிக்கும் வகுப்பு எது? ..........................................

ஆ. காலையில் எழுந்ததும் என்ன செய்வார்கள்? ..........................................

இ. பாடசாலையில் காலையில் இடம் பெறுவது என்ன? ..........................................

ஈ. மாலையில் என்ன செய்வார்கள்? ..........................................

உ. வெள்ளிக்கிழமைகளில் எங்கே போவார்கள்? ..........................................

### 3. பொருத்தமான சொல்லை இடைவெளியில் எழுதுங்கள்

அ. குமரனும் பூரணியும்.......................................... தரத்தில் படிக்கிறார்கள்.

ஆ. .......................................... நேரத்திற்குச் செல்வார்கள்.

இ. அதிபர், ஆசிரியர் சொற்படி ..........................................

ஈ. வெள்ளிக்கிழமைகளில் .......................................... செல்வார்கள்.

உ. நித்திரைக்குப் போகுமுன் .......................................... பூசுவார்கள்.

நடப்பார்கள் / திருநீறு / பாடசாலைக்கு / இரண்டாம் / கோயிலுக்கு

### 4. பார்த்து எழுதுங்கள்.

**தென்னாடுடைய சிவனே போற்றி.**

..........................................

..........................................

# 14. ஔவையாரும் முருகனும்

ஔவையார் ஒரு புலவர்.
அவர் காட்டு வழியாக நடந்து சென்றார்.
களைத்துப் போனார்.
தண்ணீர்த் தாகமும் அதிகரித்தது.
பசியும் உண்டானது.
களைப்பாற விரும்பினார்.
நாவல் மரத்தின் கீழ் அமர்ந்தார்.



பழங்கள் சில நிலத்தில் விழுந்தன. அண்ணாந்து பார்த்தார். மரத்திலே ஒரு சிறுவனைக் கண்டார்.

"தம்பி! எனக்கும் நாவற்பழம் போடு" என்றார்.

பாட்டி!, சுட்டபழம் வேண்டுமா? சுடாத பழம் வேண்டுமா? என்று கேட்டான் சிறுவன்.

"சுட்ட பழமா?" ஔவையாருக்கு ஒன்றும் புரியவில்லை. யோசித்தார். "சுட்டபழம் போடு" என்றார். சிறுவன் பழுத்த பழங்களை நிலத்தில் போட்டான்.

சிறுவன் பழுத்த பழங்களை நிலத்தில் போட்டான்.

ஔவையார் பழங்களை எடுத்தார். அவற்றில் மணல் ஒட்டியிருந்தது. வாயால் ஊதினார். "பாட்டி பழம் சுடுகின்றதா? நன்றாக ஊதிச் சாப்பிடுங்கள்" என்றான் சிறுவன்.

பாட்டிக்கு அப்பொழுது தான் சுட்டபழம் என்பதன் பொருள் விளங்கியது. இச்சிறுவன் கெட்டிக்காரனாக இருக்கிறானே.



"யாரப்பா நீ" என்று ஔவையார் கேட்டார்.

"பாட்டி என்னைத் தெரியவில்லையா? நன்றாகப் பார்" என்றான் சிறுவன். சிறுவன் முருகனாக மயில்மீது காட்சி அளித்தான். ஔவையார் முருகனை வணங்கினார். பாடல்கள் பல பாடினார்.

**செயல்:**

## 1. தொடர்புபடுத்துங்கள்

| | |
|---|---|
| ஔவையார் | நாவல்பழம் |
| நன்றாக ஊதிச் சாப்பிடுங்கள் | முருகன் |
| நாவல்பழம் | புலவர் |
| சிறுவன் | சிறுவன் |

2. **விடை எழுதுங்கள்.**

அ. காட்டு வழியாக வந்தவர் யார்? ..........

ஆ. அவர் நாவல் மரநிழலில் இருந்தது ஏன்? ..........

இ. சிறுவனிடம் பாட்டி என்ன கேட்டார்? ..........

ஈ. சிறுவன் கூறியது என்ன? ..........

உ. பாட்டி பழத்தை எடுத்து ஊதியது ஏன்? ..........

ஊ. சிறுவனாக நின்றது யார்? ..........

3. **சரியாயின் "✓" எனவும் பிழையாயின் "×" எனவும் அடையாளம் இடுங்கள்**

அ. ஔவையார் காட்டு வழியாக வந்தார். ( )

ஆ. நாவல் மரத்தின் மேல் ஔவையார் இருந்தார். ( )

இ. பாட்டி! சுட்ட பழம் வேண்டுமா? என்று சிறுவன் கேட்டான் ( )

ஈ. பழம் சுட்டதால் பாட்டி ஊதினார். ( )

உ. சிறுவனாக வந்தவன் முருகன். ( )

4. **பொருத்தமான முடிக்கும் பகுதியைச் சேர்த்து எழுதுங்கள்.**

அ. ஔவையார் நாவல் மர ..........

ஆ. மரத்தின் மேல் சிறுவன் ..........

இ. சிறுவன் கேட்டது பாட்டிக்கு ..........

ஈ. பாட்டி பழத்தை எடுத்து ..........

உ. என்னைத் தெரியவில்லையா ..........

..........

..........

..........

..........

| |
|---|
| என்று சிறுவன் சிரித்தான். |
| நிழலில் இருந்தார். |
| விளங்கவில்லை. |
| ஊதினார். |
| நின்றான். |

..........

# 15. அம்பாள்



உலகத்து நாயகியே - எங்கள் முத்து
மாரியம்மா எங்கள் முத்துமாரி!

உன்பாதம் சரண் புகுந்தோம் - எங்கள் முத்து
மாரியம்மா, எங்கள் முத்துமாரி!

கலகத் தரக்கர் பலர் - எங்கள் முத்து
மாரியம்மா, எங்கள் முத்துமாரி!

கருத்தினுள்ளே புகுந்துவிட்டார் எங்கள் முத்து
மாரியம்மா, எங்கள் முத்துமாரி! (பாரதியார்)

**செயல்:**

1. **விடை எழுதுங்கள்**

அ. உலகத்து நாயகி யார்? ........................................

ஆ. யாரிடம் சரண் புகுவோம்? ........................................

இ. கலகத்தரக்கர் யார்? ........................................

ஈ. இப்பாடலை இயற்றியவர் யார்? ........................................

2. **பார்த்து எழுதுங்கள்**

**உன் பாதம் சரண் புகுந்தோம்.**

..............................................................................

# 16. சிவ சின்னங்கள்

திருநீறு, உருத்திராக்கம் முதலியன சிவ சின்னங்கள். சிவ சின்னங்களை நாமும் அணிவோம்.

சிவ சின்னங்களை அணிந்திருப்போர் சிவனடியார்கள். சிவனடியார்களைப் போற்றுவோம்.

அவர்களை வழிபடுவோம்.



படத்தில் காணப்படுபவர்கள் சிவனடியார்கள். இவர்கள் சிவ சின்னங்கள் அணிந்துள்ளார்கள்.

**செயல்:**

1. **விடை எழுதுங்கள்**

அ. சிவ சின்னங்கள் இரண்டு எழுதுங்கள்.

1. ................................ 2. ................................

ஆ. சிவ சின்னங்கள் அணிவோர் யார்? ................................

இ. சிவனடியார்களை ஏன் வழிபட வேண்டும்? ................................

2. **பார்த்து எழுதுங்கள்**

**சிவ சின்னம் அணிவோம்.**

................................................................................

# 17. ஏழைகளுக்கு உதவுவோம்

ஆசிரியர் : ஏழைகளுக்கு நாம் உதவி செய்ய வேண்டும்.

கமலன் : ஏழை என்பவன் யார்?

ஆசிரியர் : ஏழை என்பவன் வறியவன்.
அவனுக்கு உண்ண உணவில்லை.
உடுக்க உடை இல்லை. உறங்க வீடு இல்லை.
உதவி செய்ய ஒருவரும் இல்லை. எதுவும் இல்லாதவன்.

குமார், கமலன் : யார் ஏழையாகப் பிறக்கின்றனர் ஐயா!

ஆசிரியர் : பாவம் செய்தவர்களே ஏழைகளாகப் பிறக்கின்றனர்.
புண்ணியம் செய்தவர்கள் நல்லவர்களாகப் பிறக்கின்றனர்.

குமார் : புண்ணியம் என்றால் என்ன?

ஆசிரியர் : எல்லோரிடமும் அன்பாக இருத்தல்.
உயிர்களிடம் இரக்கம் காட்டுதல்.
ஏழைகளுக்கு உதவி செய்தல்.
நல்ல கருமங்களைச் செய்தல்.



கமலன் : ஏழைகளுக்கு எப்படி உதவி செய்யலாம்?

ஆசிரியர் : எம்மால் இயன்ற உதவி செய்யலாம்.
உணவு கொடுக்கலாம். உடைகள் கொடுக்கலாம்.
பணம் கொடுக்கலாம். பொருள் கொடுக்கலாம்.

குமார், கமலன் : நாங்களும் ஏழைகளுக்கு உதவலாமா?

ஆசிரியர் : தாராளமாக உதவி செய்யலாம்.
நாளைய தினம் வெள்ளிக்கிழமை.
விரும்பிய பொருட்களைக் கொண்டுவாருங்கள்.
அநாதை இல்லத்திற்குச் செல்வோம்.
அங்கு உள்ள ஏழைகளுக்குக் கொடுப்போம்.

**ஏழையின் சிரிப்பில் இறைவனைக் காண்போம்**

**செயல்:**

**1. தொடர்புபடுத்துங்கள்**

| | |
|---|---|
| பிறருக்கு உதவுதல் | அநாதை |
| ஒன்றுமில்லாதவன் | செய்வோம் |
| ஏழைகளுக்கு | ஏழை |
| தருமம் | உதவுவோம் |
| யாரும் அற்றவன் | புண்ணியம் |

**2. பொருத்தமான சொல்லை இடைவெளியில் எழுதுங்கள்**

அ. நாம் ஏழைகளுக்கு ........................................ காட்ட வேண்டும்.
ஆ. ஆதரவு இல்லாதவர்களை ........................................
இ. ........................................ செய்தவர்களே ஏழைகளாகப் பிறக்கின்றார்கள்.
ஈ. ஏழைகளுக்கு உதவுதல் பெரும் ........................................
உ. அநாதைகள் இருக்கும் இடம் ........................................ இல்லம்.

அநாதை / இரக்கம் / ஆதரிப்போம் / புண்ணியம் / பாவம்

**3. பார்த்து எழுதுங்கள்**


**ஏழைகளுக்கு என்றும் உதவுவோம்.**

........................................................................................

# 18. உயிர்களிடத்தில் அன்பு காட்டுவோம்

ஆடு, மாடு, நாய், பூனை என்பன மிருகங்கள்.

காகம், கோழி, கிளி, புறா என்பன பறவைகள். இவை எல்லாம் உயிர் உள்ள பிராணிகள். நாம் இவைகளுக்குத் துன்பம் செய்தல் கூடாது. வண்ணத்துப்பூச்சி, தும்பி, வண்டு இவைகளும் உயிரினங்களே. இவற்றையும் நாம் வருத்துதல் ஆகாது.





ஏழைகள், பிச்சைக்காரர்கள், வலது குறைந்தோர் இவர்களை நாம் இகழ்தல் ஆகாது.


இவர்களுக்குத் துன்பம் செய்தல் கூடாது. இவர்களுக்கு நாம் உதவிசெய்தல் வேண்டும்.

நமது வகுப்பில் படிப்போர் எல்லோரும் எமது நண்பர்கள்.

எல்லோரிடமும் அன்பாக இருப்போம்.

எவருக்காயினும் பட்டப் பெயர் சொல்ல மாட்டோம்.

கேலி செய்தலைத் தவிர்ப்போம்.



முதியவர்கள் எமக்கு வழிகாட்டுபவர்கள்.
அவர்களைப் பேணுவோம்.
அவர்களுக்கு உதவி செய்வோம்.
அவர்களை ஏளனம் செய்தல் ஆகாது.
எல்லா உயிர்களிலும் இறைவன் இருக்கின்றான்.
நாம் எல்லா உயிர்களிடமும் கருணை காட்டுவோம்.

**உயிர்களிடத்து அன்பு வேண்டும்**

**செயல்:**

**1. பின்வருவன சரியாயின் சரி என்றும் பிழையாயின் பிழை என்றும் எழுதுங்கள்.**

அ. காகம், கோழி, கிளி என்பன பறவைகள். ( )

ஆ. பசு, ஆடு, நாய், பூனை என்பன மிருகங்கள். ( )

இ. வண்ணத்துப்பூச்சி, தும்பி என்பன பறவைகள். ( )

ஈ. ஏழைகளை இகழ்தல் ஆகாது. ( )

உ. உயிர்களிடம் அன்பு காட்டுதல் கூடாது. ( )

ஊ. எல்லா உயிர்களிலும் இறைவன் இருக்கின்றான். ( )

## 2. விடை எழுதுங்கள்

அ. நாம் யாருக்கு இரக்கம் காட்ட வேண்டும்? ..............................................

ஆ. யாரை நாம் இகழ்தல் கூடாது? ..............................................

இ. எமக்கு வழிகாட்டுபவர்கள் யாவர்?

..............................................

ஈ. வலது குறைந்தவர்கள் எனப்படுவோர் யாவர்?

..............................................

உ. உயிர்களிடத்து ஏன் கருணை காட்ட வேண்டும்?

..............................................

## 3. பொருத்தமான சொல்லை இடைவெளியில் எழுதுங்கள்

அ. உயிர்களிடத்து .............................................. காட்டுவோம்.

ஆ. எல்லோரிடமும் அன்பாக ..............................................

இ. ஏழைகளை ஏளனம் .............................................. ஆகாது.

ஈ. முதியவர்களைப் ..............................................

உ. தருமம் செய்ய ..............................................

| இருப்போம் / பேணுவோம் / கருணை / விரும்புவோம் / செய்தல் |
|---|

## 4. பார்த்து எழுதுங்கள்

### எல்லோரிடமும் அன்பாக இருப்போம்.

..............................................

# 19. சுத்தம் பேணுவோம்

பல் துலக்குவோம். முகம் கழுவுவோம். குளிப்போம். துணிகள் துவைப்போம். துணிகளை உலர விடுவோம். வீடு வாசல் கூட்டுவோம். திண்ணை கழுவுவோம். பாத்திரங்கள் கழுவுவோம். புத்தகங்களை ஒழுங்காக அடுக்குவோம். மேசையைத் துடைப்போம். மேசைத் துணியை விரிப்போம். பூச்சாடி வைப்போம்.



சுத்தமாகச் சமைப்போம். சமைத்த உணவை மூடி வைப்போம். உணவைப் பரிமாறுவோம். கை, கால், வாய் கழுவுவோம். உண்டு மகிழ்வோம்.

**சுத்தம் சுகம் தரும்**

## செயல்:

**1. விடை எழுதுங்கள்**

அ. துணிகளை எப்படிச் சுத்தம் செய்வீர்கள்?

..............................................................................................................

ஆ. உணவு உண்பதற்கு முன் என்ன செய்வீர்கள்?

..............................................................................................................

இ. உணவை மூடி வைப்பது ஏன்? ..............................................................

ஈ. மேசையை எப்படிச் சுத்தம் செய்வீர்கள்? ..............................................

உ. ஏன் சுத்தம் பேண வேண்டும்? ..............................................................

**2. பார்த்து எழுதுங்கள்**

**சுகமாக வாழச் சுத்தம் பேணுவோம்.**

..............................................................................................................

# 20. பிரார்த்தனை செய்வோம்



பிரார்த்தனை என்பது கடவுளுடன் பேசுதல் ஆகும்.

எமக்கு வேண்டியவற்றை நாம் இறைவனிடம் பிரார்த்திக்கலாம்.

கடவுள் எங்கும் உள்ளார். எல்லாம் அறிபவர்.

நாம் சொல்லுவது அவருக்குக் கேட்கும்.

நாம் கேட்பதை அவர் தருவார்.

நாம் எதனைப் பிரார்த்திக்கலாம்?

சுகமாக இருக்கப் பிரார்த்திக்கலாம். அம்மா, அப்பா, சகோதரர்கள், நண்பர்கள் யாவரும் சுகமாக இருக்கப் பிரார்த்திக்கலாம். நல்ல பிள்ளையாக வளரப் பிரார்த்திக்கலாம். நன்றாகப் படிக்கப் பிரார்த்திக்கலாம். தினமும் கடவுளை பிரார்த்திப்போம்.

**பிரார்த்தனை நிச்சயம் பயன் தரும்**

**செயல்:**

**1. தொடர்புபடுத்துங்கள்**

| | |
|---|---|
| எங்கும் உள்ளவர் | நாம் கேட்டதைத் தருபவர் |
| நன்கு படிக்கப் | கடவுள் |
| கடவுள் | பயன்தரும் |
| பிரார்த்தனை | பிரார்த்திப்போம். |

**2. பொருத்தமான சொல்லை இடைவெளியில் எழுதுங்கள்**

அ. சுகமாக இருக்கப் ..........................................

ஆ. நாம் கேட்டதை .......................................... தருவார்.


இ. .......................................... என்பது கடவுளுடன் பேசுதல் ஆகும்.

ஈ. நன்றாகப் .......................................... பிரார்த்திப்போம்.

உ. தினமும் .......................................... பிரார்த்திப்போம்.

| படிக்க / கடவுளை / பிரார்த்திப்போம் / பிரார்த்தனை / இறைவன் |
|---|

# 21. கண்ணன் எங்கள் கண்ணனாம்



கண்ணன் குழந்தை வடிவினன். அவன் எம்மைக் காப்பவன். நீலநிற மேனியை உடையவன். குறும்புகள் செய்து எல்லோரையும் மகிழ்விப்பான். எப்போதும் குதூகலமானவன்.

கோகுலத்தில் வளர்ந்தவன். குழல் ஊதி இசைப்பதில் வல்லவன்.

கண்ணன் வெண்ணெயை விரும்பி உண்பான்.

அவன் குழல் இசை கேட்டதும் பசுக்கள் எல்லாம் ஓடி வரும்.

அன்பு மிகுதியால் பால் சொரியும்.

கண்ணனை வழிபட்டால் துன்பங்கள் மறையும்.

இன்பம் பொங்கும். இதயம் மகிழும்.

நாமும் கண்ணனைப் பாடிப் பணிவோம்.

“கண்ணன் எங்கள் கண்ணனாம்
கார் மேக வண்ணனாம்
வெண்ணெய் உண்ட கண்ணனாம்
மண்ணை உண்ட கண்ணனாம்”

**செயல்:**

## 1. தொடர்புபடுத்துங்கள்

| | |
|---|---|
| கண்ணன் | கண்ணன் |
| கண்ணனை வணங்கினால் | ஆயர்பாடி |
| கோகுலம் | கார்மேகவண்ணன் |
| குழல் ஊதுபவன் | துன்பங்கள் நீங்கும் |

## 2. சரியாயின் சரி எனவும் பிழையாயின் பிழை எனவும் எழுதுங்கள்

அ. கண்ணன் குழந்தை வடிவினன். ( )

ஆ. கண்ணன் நீலநிறம் உடையவன் ( )

இ. கோகுலம் என்பது கோபுரமாகும். ( )

ஈ. கண்ணனை வழிபட்டால் துன்பம் நீங்கும். ( )

உ. கண்ணன் குழல் ஊதமாட்டான். ( )

## 3. விடை எழுதுங்கள்

அ. கண்ணன் எங்கே வளர்ந்தான்? ..........................................

ஆ. கண்ணன் விரும்பி உண்பது என்ன? ..........................................

இ. கண்ணன் குழல் ஓசை கேட்டதும் பசுக்கள் என்ன செய்யும்? ....................

ஈ. துன்பங்கள் நீங்க யாரை வழிபட வேண்டும்? ..........................................

உ. மண்ணை உண்டவன் யார்? ..........................................

## 4. பொருத்தமான எழுத்துக்களைக் கூட்டினுள் எழுதுங்கள்

அ. கண்ணன் வளர்ந்த இடம்

ஆ. கண்ணன் விரும்பி உண்டது.

இ. எம்மைக் காப்பவன்

ஈ. கண்ணனைத் துதித்தால் துன்பம்

உ. கண்ணன் குழலிசை கேட்டதும் பசுக்கள் பால்

| | | | |
|---|---|---|---|
| ....... | கு | ல | ....... |
| வெ | ....... | ....... | ய் |
| த | ....... | ண | ....... |
| நீ | ங் | ....... | ம் |
| ....... | ரி | யு | ....... |

## 5. உங்களுக்குத் தெரிந்த கண்ணன் பாட்டு ஒன்று எழுதுங்கள்

..........................................................................................

..........................................................................................

..........................................................................................

..........................................................................................

# 22. கொன்றை வேந்தன்

## காப்பு

கொன்றை வேந்தன் செல்வன் அடியினை
என்றும் ஏத்தித் தொழுவோம் யாமே.

1. அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம்.
2. ஆலயம் தொழுவது சாலவும் நன்று.
3. இல்லறம் அல்லது நல்லறம் அன்று.
4. ஈயார் தேட்டைத் தீயார் கொள்வர்.
5. உண்டி சுருங்குதல் பெண்டிர்க்கழகு.
6. ஊருடன் பகைக்கின் வேருடன் கெடும்.
7. எண்ணும் எழுத்தும் கண்ணெனத் தகும்.
8. ஏவா மக்கள் மூவா மருந்து.
9. ஐயம் புகினும் செய்வன செய்.
10. ஒருவனைப் பற்றி ஓரகத்திரு.
11. ஓதலின் நன்றே வேதியர்கு ஒழுக்கம்.
12. ஔவியம் பேசுதல் ஆக்கத்திற்கு அழிவு.



**செயல்:**

**1. விடை எழுதுங்கள்**

அ. கொன்றை வேந்தன் யார்?

..........................................................................................

ஆ. நாம் முதல் தெய்வங்களாக யாரை எண்ண வேண்டும்?

..........................................................................................

இ. எது நல்லது?

..........................................................................................

ஈ. நல்ல அறம் எது?

..........................................................................................

உ. கொடுக்காதவர்கள் தேடிய செல்வத்தை யார் கொண்டு போவார்?

..........................................................................................

2. ஔவையாரைப் பற்றி வாக்கியங்கள் எழுதுங்கள்

......................................................................................................

......................................................................................................

3. இடைவெளிகளில் பொருத்தமான சொல் வைத்து நிரப்புங்கள்

அ. கடவுளை வணங்குவது மிகவும் ..............................................

ஆ. மூவா மருந்து என்பது ..............................................

இ. பிராமணர்கள் .............................................. உள்ளவர்களாக இருக்க வேண்டும்.

ஈ. பொறாமையான .............................................. பேசுதல் செல்வம் வளர்வதற்கு உதவாது.

உ. .............................................. எடுத்த போதிலும் செய்ய வேண்டிய நல்ல செயல்களை விடாமல் செய்தல் வேண்டும்.

| தேவாமிர்தம் / நல்லது / வார்த்தைகளை / பிச்சை / ஒழுக்கம் |
|---|

4. பார்த்து எழுதுங்கள்

**ஔவைப்பாட்டி நம் பாட்டி.**

......................................................................................................

......................................................................................................



விற்பனையாளர்:

**லங்கா புத்தகசாலை,**
F.L-1/14, டயஸ் பிளேஸ்,
குணசிங்கபுர, கொழும்பு - 12
☎ 2341942

விலை: 125/-